தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 138

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ 24—0—0
6 மாதம் ரூ 12—0—0
3 மாதம் ரூ 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: கார்த்திகை 6ௗ சனி (21—11—53) ★ ★ வெளியூர்: கார்த்திகை 7ௗ ஞாயிறு (22—11—53)

கருணாநிதி வரவேற்பைச் சிறந்ததோர் வரலாறாக்கியது திருச்சி

★



20,000 மக்களுக்கு மேல் கலந்து கொண்ட மகத்தான ஊர்வலம்

1,000 'சைகில்'கள் ஊர்வலத்துக்கு முன் அணிவகுத்து ஊர்ந்து வந்த காட்சி!

★

தி. மு. கழகத் தலைமை நிலைய சார்பில் பொறுப்பாளர் கோவிந்தசாமி பிள்ளை மாலையிட்டு வரவேற்றார்

(டிரங்க் செய்தி)

திருச்சி, நவ. 21—

கல்லக்குடி அறப்போராட்டத் தலைவர் தோழர் மு. கருணாநிதி இன்று காலை 10-30 மணிக்கு திருச்சி மத்திய சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

அவருடன் தோழர்கள் முல்லை-சக்தி, கஸ்தூரி ராசா, குழந்தைவேல், குமரவேல் ஆகியோரும் விடுதலை செய்யப்பட்டனர்.

சிறைவாயிலில், தி. மு. கழகத் தலைமை நிலையப் பொறுப்பாளர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அரங்கண்ணல், மதுரை முத்து, சி. பி. சிற்றரசு, கே. கே. நீலமேகம், காரைக்குடி ராம. சுப்பையா, ஏ. பி. தாமலிங்கம், எம். எஸ். மணி, பொன்மலை பராங்குசம், ஈரோடு அப்பாவு, கோவை ராசமாணிக்கம், தஞ்சை பதி, வேலூர் மணி குழந்தை, அன்பழகன், மன்னார்குடி நாராயணசாமி, கே. சீனிவாசன், மதுரை எம். ஆர். கணேசன், சென்னை கண்ணபிரான், சண்முகவடிவேல், திருவாரூர் தட்சிணாமூர்த்தி, திருச்சி சிவப்பிரகாசம், வேலூர் கண்ணன், கரூர் முருகேசன் ஆகியோரும் குழுமியிருந்து, தோழர் கருணாநிதி குழுவினரை மலர் மாலை சூட்டி வரவேற்றனர்.

ஊர்வலம் சிறைவாயிலிலிருந்து புறப்பட்டது. ஊர்வலத்தில் 20,000-த்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். 1000 சைக்கிள்கள் கொண்ட அணிவகுப்பு ஊர்வலத்தின் பெருமைக்கும், கல்லக்குடி அறப்போராட்டத்திற்கு மக்கள் காட்டும் ஆதரவிற்கும் சிகரம் அமைத்தாற்போலிருந்தது. திருச்சி நகர் திரண்டிருக்கிறதோ என ஐயுறும் வண்ணம் அணிவகுத்து வந்த திராவிடர் படை எழுப்பிய, "டால்மியாபுரம் கல்லக்குடியாகும்," "தூத்துக்குடி சதிவழக்கை வாபஸ் பெறு" என்ற பேரொலி, டில்லி ஏகாதிபத்யத்தை கலகலக்கச் செய்யக்கூடியதாக இருந்தது.

ஊர்வலம் நகரின் முக்கிய தெருக்களின் வழியாக வந்து கொண்டிருக்கிறது.

(செய்தி முடியவில்லை)

சினிமாப் பட தணிக்கைக் குழுவுக்கு எம். ஜி. ராமச்சந்திரன் எச்சரிக்கை

தி. மு. கழக நடிகர்கள் நடிக்கும் படங்களுக்கு காட்டும் ஓரவஞ்சனை ஒழிய வேண்டும்

'நாம்' வெற்றிபெறாததற்கு தணிக்கை குழுவே பொறுப்பாகும்

மதுரை, நவ. 21—

"சினிமாப் படத் தொழிலில் தணிக்கை செய்வது குறித்து அரசாங்கம் சரியான கொள்கையை கையாளவில்லையானால், மாபெரும் எதிர்ப்புப் போராட்டம் நடைபெறும்."

"திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடிக்கும் படமென்றால், அரசாங்கம் பெருமளவு தணிக்கை செய்வது, படத்தின் தன்மையைக் கெடுத்து விடுகின்றது."

"உதாரணமாக, 'நாம்' என்ற திரைப்படத்தை ஏழாயிரம் அடி தணிக்கை செய்து, எடுத்துவிட்டதின் பலனாய் நல்ல வசூலைக் கொடுக்காமல் படத்தின் வெற்றியைக்கூட கெடுத்து விட்டது."

"இந்த நிலையில், மேலும் நாங்கள் நடிக்கும் படத்தின் தணிக்கையை அரசாங்கம் அமுல் நடத்துவதில் ஏதாவது ஒரு நிலையான கொள்கையைக் கைக்கொள்ள வேண்டும்."

"சமூகப் படம் அல்லது வேறு எந்தவிதமான படத்தை எடுக்க வேண்டும் என்பதை அரசியலார் முன்கூட்டி அறிவித்துவிட வேண்டும். விணாக, படம் எடுத்து முடிந்த பின்னர் அதை தணிக்கை என்ற முறையில் தடை செய்வது சிறந்த காரியமல்ல."

"இதுபோன்று அரசாங்கம் செய்து கொண்டே போகுமானால் அதற்காக மாபெரும் போராட்டத்தைத் தொடங்குவேன். இதற்காக மக்களிடம் கையெழுத்து இயக்கம் ஒன்று விரைவில் தொடங்கப்படும்."

—இவ்வாறு, புகழ் பெற்ற திரைப்பட நடிகரும், தி. மு. கழக உறுப்பினருமான தோழர் எம். ஜி. ராமச்சந்திரன் இன்று மாலை அமெரிக்கன் கல்லூரியில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார்.

கூட்டத்திற்கு தோழர் நாராயண பிள்ளை தலைமை வகித்தார்.

தோழர் ராமச்சந்திரன் மேலும் பேசுகையில், குறிப்பிட்டதாவது:

"நடிகர்களின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. என்னுடைய நாடகங்கள் மூலம் நான் கட்சிப் பிரசாரம் செய்து வருகிறேன்,"

"நடிகர்களில் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை ஊக்குவிப்பதற்காக போட்டி நடத்தப்படும். மாணவர்கள் அதற்கு ஒத்துழைப்பைத் தர வேண்டும்," என்றார்.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி

★

இதுவரை சேர்ந்துள்ளது

ரூ. 3436-2-2

ஆந்திர மாநிலத்தில் மதுவிலக்குக்கு உலை?

கர்நூல், நவ. 20—

"மதுவிலக்கைத் திறமையாக நிறைவேற்றி வெற்றி காண முடியவில்லையானால், மதுவிலக்கை ஒழித்துக்கட்டுவதற்கு நான் தனியும் தயக்கம் காட்டமாட்டேன்."

—இவ்வாறு, ஆந்திர மாநில முதல் அமைச்சர் பிரகாசம் அவர்கள் அமைச்சர் குழுவும், உயர்தர அதிகாரிகளும் கூடியிருந்த கூட்டமொன்றில் தெரிவித்தார்.

"ஏழைமக்களின் வாழ்க்கை வளர்த்திறகுப் பாடுபடுவதில் வெறும் மனோபிராந்தி குறுக்கிட்டுத் தடை விதிப்பதற்கு இடங்கொடுக்க மாட்டேன். பிரகாசம் நாத இருக்கும், மதுவிலக்கின் முழு [illegible] யும் கண்டறிந்து [illegible] மே," என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பிரகாசம் கேட்டுக்கொண்டார்.

ஐவர் சிறையில்!

இன்று

82-வது நாள்

நம் நாடு

தி. மு. கழகத்தின் இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 21—11—1953 சனி

இளவலின் சிறை மீட்சி!

கல்லக்குடி பெயர் மாற்ற அறப்போராட்டத் தலைவர், நமது இளவல், கருணாநிதி, அமைச்சர் ஆச்சாரியாரின் விருந்தினராக ஐந்து திங்கள் இருந்துவிட்டு, இன்று காலை வெளிவந்து இருக்கிறார். சிறைவாசம் சுகவாசம் என்று ஒருவரும் சொல்லமாட்டார்கள். அதுவும் செயல் செயல் என்று துடிதுடிக்கும் உள்ளத்தை இயல்பாகவே கொண்டுள்ள இளவல், சிறையைச் சுகவாழ்வாகக் கருதி இருப்பார் என்று எவரும் கூறத் துணியார். சுறுசுறுப்பின் உருவென்று பணியாற்றும் பெற்றியினரான நண்பருக்கு, இந்த ஐந்துத் திங்கள் சிறை வாழ்வு ஐந்தாண்டு போலத்தான் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

சிறையிலே கிடைக்கும் வசதிக் குறைவை, அவர், அவ்வளவாகப் பொருட்படுத்தி இருக்கமாட்டார் என்பது, அவரை அறிந்துள்ள அனைவருக்கும் ஒப்ப முடிந்த உண்மையாகும். தொடுத்த அறப் போராட்டத்தை, தாம் வெளியே இருந்து, கண்காணித்து மேலும் மேலும் நடத்துவதற்கு தமக்குள்ள வாய்ப்பை, ஆச்சாரியார் சர்க்கார், சட்டமெனும் வாள்கொண்டு, தண்டித்துச் சிறையெனும் சாக்காட்டில் ஐந்து திங்கள் தள்ளிச் சிதைத்து விட்டதே, என்ற கவலைதான், கருணாநிதியை விட்டு நீங்கி இருக்காது; அவர் மேனியையும், [illegible] பொலிவையும் சுருங்கச் செய்திருக்கும் என்பது மறக்கமுடியாத உண்மையாகும்.

கருணாநிதியை நிழல்போல் தொடர்ந்து சிறைசென்ற தோழர்கள் முல்லை சத்தி, கஸ்தூரிராஜு, குமரவேல், குழந்தைவேலு ஆகியோரின் உழைப்பும், தியாகமும் திராவிடர்களால் மறக்கக்கூடியதன்று.

வடநாட்டு ஏகாதிபத்ய சின்னமாகவும், திராவிடர்களை இழிவுபடுத்திக் கொண்டிருப்பதாகவும், குறிப்பிட்ட வட்டார மக்களின் உரிமையைப் பறிமுதல் செய்வதாகவும் இருந்துவந்த 'டால்மியாபுரம்' என்ற புகைவண்டி நிலையப் பெயரை 'கல்லக்குடி'யாக மாற்றவேண்டும் என்ற தி. மு. க. வின் அறப்போராட்டத்திற்கு, கருணாநிதி குழுத் தலைவராக இருந்தார். இந்தப் பெயர் மாற்ற அறப்போர் 'திராவிட நாடு' ஏற்பாட்டிற்கு வாய்ந்ததோர் முன்னேற்பாடாகும் என்பது, நமது தி. மு. கழகத்தின் அடிப்படையைச் சாதாரணமாகத் தெரிந்திருப்பவர்கள்கூட புரிந்துகொண்டு இருக்கும் விஷயமாகும்.

எனவே, ஒரு அரசியல் கட்சி என்ற முறையில், நமது தி. மு. கழகம் இந்தப் பெயர் மாற்றப் போராட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, செயலில் வெற்றிகாண முயற்சித்ததில், சூது மதியினர் நீங்கலாக வேறு மதியினர் விதண்டாவாதம் பேசக் கிளம்பார். ஒரு அரசியல் கட்சி மேற்கொள்ளும் சிலபல நடவடிக்கைகள், அந்தக் கட்சிக்குள்ள மூல இலட்சியத்துக்கு அரண் செய்வதாக இருக்கிறதா அல்லது முரண்படுவதாக இருக்கிறதா என்ற அளவையைத்தான் அளவு கோலாகக் கொண்டு அளந்து பார்த்து முடிவுக்கு வரவேண்டியதே முறை. இதுதான் அரசியல் நாகரீகம். பிறர் மூட்டிய தீயில் குளிர்காய வேண்டும் என்று கருதிக் கிடப்பவர்கள்தான், இந்த அறப் போராட்டம், தங்கள் நடுக்கத்தைப் போக்குவதற்கு உதவுவதாகக் காணுமே என்று முகாரி பாட முந்துவர். இந்த அழுகையை அலட்சியப்படுத்தி, தனது லட்சிய வெற்றிக்கான காரியங்களில் ஈடுபடுவதுதான் தேவைப்படுவது என்பதை வலியுறுத்திக் கூறத் தேவை இல்லை.

பெயர் மாற்ற அறப் போராட்டத்தில், நமது தி. மு. கழகம் தீவிரமாக ஈடுபட்டதைக் கொண்டு, தீர்க்கப்பட வேண்டிய வேறு முக்கியமான பிரச்சினைகள் நாட்டில் கிடையாது என்று அர்த்தமல்ல. அவைகளைத் தீர்ப்பதில், தி. மு. கழகத்திற்கு அக்கறை கிடையாது என்றும் ஏற்பட்டுவிடாது. அவைகளுக்குப் பரிகாரம் தேட, மற்றவர் முயன்றால், அதுகண்டு நமது கழகம் குதர்க்கம் பேசவும் பேசாது; மேற்கொள்ளுகிறவர்களைப் பகைமை பாராட்டவும் பார்க்காது. பரிசுத்தமான ஒத்துழைப்பை, நல்ல காரியங்களுக்கு, என்றும் தி. மு. கழகம் கொடுக்கத் தவறினதும் கிடையாது. ஒத்துழைப்பு என்பதற்காக, இச்சகத்துக்கு மடங்கியும், அச்சுறுத்தலுக்கு அஞ்சியும், தனது தனித்தன்மையை என்றும், தி. மு. கழகம் பலி கொடுக்கச் சம்மதிக்காது என்பது முக்காலும் உண்மையாகும். நிற்க,

கருணாநிதி, தமது கரங்களால், ஜூலை 15-ந் தேதி 'டால்மியாபுரம்' என்ற இடம் காட்டும் பலகையின்மீது, 'கல்லக்குடி' என்று, தன்மானப் பெயர் அச்சடித்தத் தாளை ஒட்டிவிட்டுச் சென்றார்; நிறுத்தெறியப்படவில்லை ஆட்சியாளர்களால். சட்டத்தைப் பாதுகாப்பதற்கு என்றே இருக்கும் ஆச்சாரியார் சர்க்கார், 'கல்லக்குடி' பெயர் தாளை அகற்றிவிட்டு, சட்டத்தை காப்பாற்ற முன்வரவில்லை. அந்த அளவிற்கு ஆச்சாரியார் சர்க்காருக்கு நடுக்கம் கண்டு போய் இருக்கிறது. வேலியே பயிரை மேய்வது என்றப் போக்கில் சட்டத்தைக் காப்பாற்ற வேண்டிய ஆச்சாரியார் சர்க்கார், சட்டத்தையே அலட்சியப்படுத்தி நடந்தாவது, திராவிடர்களின் எதிர்ப்பைத் தணித்து அடங்கச் செய்தால் போதும் என்ற முடிவிற்கு வந்துவிட்டார். இது எதைக் காட்டுகிறது?

தி. மு. கழகத்தின் நோக்கம், கருணாநிதியை தலைவராகக் கொண்ட அறப்போராட்டக் குழுவின் அரும்பெரும் தியாகத்தால், வெற்றிபெற்று இருக்கிறது—அதுவும் குறிப்பிடத் தகுந்த அளவில் என்ற உண்மையைத்தானே எடுத்துக் காட்டுகிறது?

கருணாநிதி கைது செய்யும்பொழுது, 'கல்லக்குடி'யைக் கண்ணாரக் கண்டு, உள்ளப் பூரிப்புக் கொண்டுதான், ஆச்சாரியார் சர்க்காரின் இருட் சிறைக்குச் சென்றார்.

ஐந்து திங்களுக்குப் பிறகு வெளிவந்து பார்க்கும் பொழுதும், 'கல்லக்குடி' நிலைத்து நிற்பதைக் கண்ணாரக் காண்கிறார். இந்த வெற்றிகரமான அறப்போர் களச் செய்தியை கருணாநிதி, பார்த்த உடனேயே நம்ப மாட்டார் தன்னுடைய கண்கள்தான் தன்னை ஏமாற்றுகிறதோ என்றுங்கூட எண்ணுவார்! ஐந்துத் திங்கள் இருட் சிறையில் கிடந்ததால், தனது பார்வைக்குத்தான் ஏதாவது பழுது ஏற்பட்டு இருக்கிறதோ என்றுங்கூட அவர் எண்ணக்கூடும்! அல்லது 'வெற்றி பெறுவோம், தோல்வி இல்லை' என்ற, கழகத்தின் நெஞ்சுரந்தான், இப்படி உருவெளித் தோற்றமாகத் தெரிகிறதோ என்றுங்கூட அவர் முதற்கண் சிந்திக்கக்கூடும்!

பெயர்ப் பலகை அருகில் சென்று, 'கல்லக்குடி' என்னும் மானங்காத்தத் தமிழ் எழுத்துக்களைத் தனது விரல்களால் தடவிப்பார்த்து, அவர் விட்டுப்போன பணியைத் தொடர்ந்து செய்துவந்த அறப் போராட்ட வீரர்களின் சாட்சியங்களை கேட்டு, அவ்வளவுக்கும் பின்னர்தான் பெயர் மாற்ற அறப் போராட்டம், முழு அளவில் வெற்றிபெற்று இருக்கிறது என்ற மறைக்க முடியாத உண்மையை, மறுக்க முடியாத மெய்மையை நண்பர் கருணாநிதி புளகாங்கிதத்தோடு ஏற்றுக் கொள்வார்.

சர்க்கார், தங்களுடைய தோல்வியை ஏற்றுக்கொண்டு, 'கல்லக்குடி'க்கு சட்டத்தில் இடமளிப்பதற்கு மேலும் சில நாள் செல்லும். என்ன இருந்தாலும் காங்கிரஸ் சர்க்காரல்லவா? அதற்கும் 'போலி கவுரவம்' இல்லாமலா இருக்கும்?

அறப் போராட்டத்தின் 'அறநெறியை' ஆச்சாரியார் சர்க்காரும் ஐயத்திற்கு இடமில்லாமல் ஒப்புக்கொண்டு இருக்கிறது. இதை நமது தி. மு. கழகத்தின் பொன்னேடுகளிலே பொறித்தாகிவிட்டது. சர்க்கார் ஏடுகளில் ஏற இன்னும் சில நாள் செல்லும். காத்திருப்போம்! காலம் மாறும்!

நண்பர் கருணாநிதி எதற்காக இத்தனை நாட்களாக இருட்டறையில் கிடந்தாரோ, இன்னல் பல மகிழ்ச்சியோடு ஏற்றாரோ, அது வீண்போகவில்லை; கணிசமான வெற்றி பெற்றிருக்கிறது. வெற்றி தேடித் தந்த இளம் வீரரை வாழ்த்துகிறோம்—வரவேற்கிறோம்!

முல்லை சத்தி, கஸ்தூரி ராஜு, குமரவேல், குழந்தைவேல் ஆகிய அருமைத் தோழர்கள் திராவிடத்துக்கு வெற்றியைத் தேடித் தந்துள்ளார்கள். அவர்களையும் பாராட்டுகிறோம்; அவர்களுக்கும் உளங்கனிந்த வரவு கூறுகிறோம்.

பெர்லின் பாதையிலே ஆச்சாரியார்!

வேலை இழக்கும் தொழிலாளருக்கு பொருளீடு

புதுடில்லி, நவ. 21—

தற்காலிகமாக வேலையிலிருந்து தள்ளிவைக்கப்பட்ட அல்லது ஆள் குறைப்பு நடவடிக்கையினால் வேலை இழந்த தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு அளிக்க வகை செய்யும் தொழில் தகராறு திருத்த மசோதாவை, மக்கள் சபையில் உதவி தொழிலாளர் மந்திரி கொண்டுவந்துள்ளார்.

ஒரு ஆண்டிற்குக் குறையாமல், ஒரு முதலாளியிடம், ஒரு தொழிலாளி வேலை பார்த்து, எழுத்து மூலம் ஒரு மாத முன்னறிவிப்பு கொடுக்காதவரை அவரை [illegible] யிலிருந்து நீக்கக் கூடாது. அல்லது நோட்டீசிற்குப் பதிலாக ஒரு மாத சம்பளம் கொடுக்க வேண்டும்.

அதோடு, பூர்த்தியான ஒவ்வொரு ஆண்டிற்கும் [illegible] அதற்குமேல் 6 மாதங்கள் அதிகப்படியாக உள்ள காலத்திற்கும் சராசரி 15 நாள் சம்பளத்தைக் கணக்கிட்டு 'பணம்' தர வேண்டும்.

மறைவு

அருப்புக்கோட்டை நகராட்சி மன்றத்தின் துணைத் தலைவர் தோழர் எ. எஸ். இராமசாமி அவர்களின் பெண் மகவு 'திங்கள் சுடர்' கடந்த 16—11—53 மாலை 4 மணிக்கு இயற்கை எய்தியது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். (ஆ-ர்)

வேண்டாம் விளையாட்டு; விளைவு விபரீதமாகும்!

தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் தலைவர் ஆ. இரத்தினம் எம்.எல்.ஏ. அவர்களின் எச்சரிக்கை

"இளஞ் சிறார்களின் இனிய எதிர்காலத்தை இருள் நிலையாக்குவதற்காக இம்மாநில முதலமைச்சர் கனம் ஆச்சாரியாரால், மக்களை மதியாமல்—மக்கள் மன்ற பிரதிநிதிகளின் தீர்ப்பை அலட்சியப்படுத்தி—அறிஞர்களின் அறிவுரையை அப்புறத்தள்ளி, நாட்டில் அமுலாக்கப்படுகின்ற 'புதிய ஆரம்பக் கல்வித் திட்டம்' என்ற வர்ணாசிரமத் திட்டத்தை இந்நாடே எதிர்த்தது—எதிர்த்து—கண்டனக் கணைகள் அவரது 'முகாமி'லேயே பிறந்தும் கிளம்பின—ஆச்சாரியாரோ மலைத்துவிட்டார்!

இதுபோன்ற மக்களின் வாழ்வை அரிக்கும் பல திட்டங்களை, ஜனவிரோத சர்க்காரான ஆச்சாரியார் ஆட்சி கொண்டுவந்ததை—வருவதை, இந்நாட்டிலுள்ள எல்லாக் கட்சியினரும், நியாய புத்தியுள்ள எவரும் கண்டிக்கின்றனர்.

மக்களின் ஒன்றுபட்ட இந்தக் கண்டனம், அண்மையிலே நடைபெற்ற விருத்தாசலம்—காங்கயம் தேர்தல் வெளிச்சமாக்கிவிட்டது. மக்கள் மன்றம் தன்னை எதிர்க்கிறது—தனது 'முகாமி'லேயே வரதராஜுலு நாயுடு போன்ற செல்வாக்குள்ள காங்கிரஸ்காரர்கள் எதிர்க்கிறார்கள் என்பதைத் தெரிந்தும், ஆச்சாரியார் மீண்டும் ஹிட்லர் சென்று அழிந்த பெர்லின் பாதையிலேயே போக விரும்புகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களான தோழர் அண்ணாதுரை உட்பட ஐவர் மீது இன்றைய ஆட்சியாளர் வழக்குத் தொடுத்து சிறைக்குள் தள்ளியதும்—சிறையை சிரித்த முகத்துடன் வரவேற்று, அத்தலைவர்கள் உள்ளே சென்றதும்—மீண்டும் நீதிமன்றம் அளித்த தண்டனைக் காலம் முடிந்தபின்னரே நவம்பர் 30-ந் தேதி அவர்கள் வெளியே வரப்போகிறார்கள் என்பதும் நாடே அறிந்தது.

பல கோணங்களில் ஜனநாயகத்தை வதை செய்யும் கனம் ஆச்சாரியார், அத்தலைவர்களைத் திரும்பவும் சிறைக்குள் தள்ள வழக்குத் தொடர்ந்திருக்கிறார் என அறிந்து நான் மிகவும் கொதிப்படைகிறேன்.

மக்கள் மன்றத்தில் மகத்தான செல்வாக்குப் பெற்றுள்ள தலைவர்களை மக்களிடம் விடாமல்—அவர்களின் கண்களுக்குக் காட்டாமல் சிறைக்குள்ளேயே பூட்டி வைக்க வேண்டும் என்ற சிந்தனையோடு ஆச்சாரியார் நடப்பாரேயானால், மக்களிடம் அவர் விளையாடுகிறார் என்றுதான் அர்த்தம். வேண்டாம் விளையாட்டு; விளைவு விபரீதமாகும் என ஆச்சாரியாருக்கு நான் எச்சரிக்கை விடுகிறேன்.

மக்கள் ஒரு குமுறும் எரிமலை; அது வெடித்தால், ஆட்சிபீடம்......? சரித்திரத்தை அறிந்த கனம் முதலமைச்சர் ஜனநாயகக் கொலையை நிறுத்திக் கொள்ளவேண்டும் என எச்சரிக்கிறேன்.

காங்கிரஸ் சர்க்காரின் இது போன்ற நடவடிக்கையை எதிர்த்து தமிழ் நாட்டிலுள்ள தாழ்த்தப்பட்டோர் அனைவரும் கண்டனக் குரலை கிளப்ப வேண்டும் என கேட்டுக் கொள்ளுகிறேன்.

80,000 பவுன் நகைகளை பறிகொடுத்த இளவரசி!

ஸ்டாலின் பரிசளித்த கோட்டும் போய்விட்டதாம்!

பாரிஸ், நவ. 21—

பாரசீக ஷாவின் சகோதரி இளவரசி அஷ்ரப், 80,000 பவுன் மதிப்புள்ள நகைகளையும், மணி மணிகளையும் பறிகொடுத்திருக்கிறார். இவை களவாடப்பட்டு விட்டதென்று இப்போது தான் தெரியவந்திருக்கிறது.

இதில், ஸ்டாலின் பரிசாக அளித்த 10,000 பவுன் மதிப்புள்ள கோட்டு ஒன்றும் போய்விட்டதாம். —ரோபன்

‘அவ்வையார்’ படத்துக்கு விருதைத் தமிழ்க் கழக கண்டனம்

— (:) —

வள்ளுவப் பெருந்தகையை இழிவுபடுத்தும் அக்கிரமம்

சிறந்த வரலாறுகள் விடப்பட்டுள்ளன! பொருந்தாக் கோளாறுகள் புகுத்தப்பட்டுள்ளன!!

விருதை, நவ. 21—

“‘அவ்வையார்,’ என்ற திரைப் படத்தை, ஏழாண்டுகள் முயன்று ‘அவ்வையார்’ வரலாற்றைத் திரைப் படமாக எடுத்திருக்கின்றோம்” என்று கூறி வருகிறார்கள்; ஆனால், அப்படத்தில், சிறந்த வரலாறுகள் விடப்பட்டும், இல்லாதன பல புகுத்தப்பட்டும், கலப்படங்கள் பல காட்டப்பட்டும், குறிப்பாக வள்ளுவப் பெருந்தகையை இழிவுபடுத்தியும், பல முரண்பாடுகள் சேர்க்கப்பட்டும் காட்டப்படுவதால், இச்கழகம் அவற்றிற்காக மிகவும் வருந்துவதுடன், வன்மையாகக் கண்டிக்கிறது,”

என்று, 26—9—53-ல், தோழர் வே. ஆனைமுத்து தலைமையில் கூடிய விருதைத் தமிழ்க் கழகப் பொதுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவன :—

“இனிமேல் வெளிவரும் திரைப் படங்களில் இலக்கியத்திற்கும், வரலாற்றுக்கும் மாறுபாடான நிகழ்ச்சிகள் வராதவண்ணம் தடுக்க வேண்டுமென்று அரசியலாரை வேண்டிக்கொள்கின்றது.”

“அதனோடு தமிழறிஞர்களும் சேர்ந்த பல நிகழ்ச்சிகளில் விழிப்புடனிருத்தல் வேண்டுமென்று வேண்டிக்கொள்கின்றது.”

ஆந்திர மாகாணம் பிரிந்துவிட்டதினால், இனி தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்றும் தமிழ் மாகாணத்தை அமைக்க வேண்டுமென்றும் அரசியலாரை வேண்டிக் கொள்கின்றது.

கட்ஜுவுக்குக் கருப்புக் கொடி

பஞ்சாபிகள் கிளர்ச்சி

பாட்டியாலா, நவ. 19— இன்று, காலை இங்கு, நிர சதி அகாலி தள காரியாலயத்திற்கு முன்பாக, உள்நாட்டு அமைச்சர் டாக்டர் கட்ஜு காரில் செல்லுகையில் ஏராளமானவர்கள் கருப்புக் கொடி பிடித்து கண்டனத்தைத் தெரிவித்தனர்.

அவர்கள், தங்களுக்குப் பஞ்சாபி மொழி பேசும் தனி மாநிலம் கோரி அண்டி பிரசுரங்களைத் தூவினர். ‘ஜனுதிபதி’ ஆட்சி ஒழிக என்று கோஷமிட்டனர். யாரும் கைது செய்யப்படவில்லை, போலீசாரும் தலையிடவில்லை.

டாக்டர் ஜகன் டெல்லி சேர்ந்தார்

புதடெல்லி, நவ. 20— கயாஞ தலைவர்களான டாக்டர் ஜகனும், பர்ன்ஹாமும் இன்று இரவு டெல்லி வந்து சேர்ந்தனர். ஏராளமானோர் அவர்களை விமான நிலையத்தில் வரவேற்றனர்.

பத்திரிகை நிருபர்களிடம் ஜகன் பேசுகையில், தான இந்தியாவின் ஆதரவு பெறவே வந்திருப்பதாகச் சொன்னார்.

மீனச்சில் பார்லிமெண்ட் தேர்தல் முடிவு!

கம்யூனிஸ்டு ஆதரவு பெற்ற அக்கம்மா வார்க்கி தோல்வி

திருவனந்தபுரம், நவ. 19— திரு—கொச்சியில் மீனச்சில் பார்லிமெண்ட் தொகுதியில் நடைபெற்ற பாராளு மன்ற இடைத் தேர்தலில், காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஜார்ஜ் தாமஸ் — கோட்டுக்கப்பள்ளி 1,57 006 வாக்குகளைப் பெற்றார். அவருக்குப் போட்டியாக நின்ற, கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு பெற்ற அக்கம்மா வார்க்கி என்பவர், 1 16 717 வாக்குகளைப் பெற்றார். 40,259 வாக்குகளைக் கூடுதலாகப் பெற்ற காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

அந்தத் தொகுதி மொத்த வாக்காளர் தொகை 3 91 606 ஆகும். பதிவான வாக்குகள் 69 3 சதவிகிதமாகும்.

இந்த இடைத் தேர்தல் நடைபெற்றதற்குக் காரணம், காங்கிரஸ் உறுப்பினரான பி. டி. சாக்கோ என்பவர் தமது பதவியை ராஜிநாமா செய்து விட்டதேயாகும்.

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

தூத்துக்குடி தி. மு. கழகத் தோழர்கள் கே. வி. கே. சாமி, தங்கப்பழம், சிவசாமி ஆகிய 96 பேர் மீது போலீசார் தொடுத்துள்ள வழக்கில், ஜாமீன் விடுதலையில் இருப்பவர்களும் ரிமாண்டில் இருப்பவர்களுமான தோழர்கள் 17-ந் தேதி 2-வது அடிஷனல் விசேஷ முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் சன் அரிகரய்யர் முன்பு ஆஜராயினர். வழக்கு மீண்டும் இம்மாதம் 26 தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

○○○○○○○○○○○

கழகக் கூட்டங்கள்

★

ஆலந்தூர்:

22—11—53 ஞாயிறு மாலை

தலைவர் : மு. தங்கவேலர்

பேச்சாளர்கள் :

நடிகமணி டி. வி. நாராயணசாமி

வி. எஸ். கோவிந்தராசன்

முகவை ஆர். எஸ். பாண்டியன்

இடம் :— தருமராஜா கோவில் எதிரில்

★

காஞ்சிபுரம்:

22—11—53 ஞாயிறு மாலை

பேச்சாளர்கள் :

சி. வி. எம். அண்ணாமலை,

தோழியர் :

அருண்மொழி பி. ஓ. எல்.,

பூங்கோதை,

இடம்: பிள்ளையார்பாளையம் திருவேலகம்பன் தெரு

★

மோவூர்:

22—11—53 ஞாயிறு மாலை

தலைவர் : எம். சு. இராமசாமி

பேச்சாளர்கள் :

இராமாமிர்தத்தம்மையார்

குடந்தை-எஸ். கே. சாமி

லா. ந. இராமலிங்கம்

பொ. சொக்கலிங்கம்

○○○○○○○○○○○

37-வது வட்ட பொதுக் கூட்டம் ஒத்திவைப்பு

“சென்னை, இராயப்பேட்டை, 37-வது வட்ட தி. மு. கழகத்தின் சார்பில், 21—11—53-ல் நடைபெறவிருந்த பொதுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது; தேதி பின்னர் அறிவிக்கப்படும்,” என்று, செயலாளர் கோ. இளவரசு அறிவிக்கிறார்.

திருமணங்கள்

இசைமுரசு நாகூர் அனிபாவுக்கு, தோழியர் ரோஷன் பேகத்திற்கும் 26—11—53 வியாழன் இரவு 9 மணிக்கு சென்னை மூர் தெருவில் திருமணம் நடைபெறும். 2—12—53 புதனன்று மாலையில் வரவேற்பு நடைபெறும்.

* * *

23—11—53 திங்கட்கிழமை காலை 5 மணிக்கு தோழர் செல்ல பெருமாளுக்கும், தோழியர் முத்தாட்சிக்கும் பாளையங்கோட்டை பெருமாள் மேல ரத வீதியில் திருமணம் நடைபெறும்.

“இந்தனர்”

வெள்ள நிவாரண நிதிக்காக, வில்லிவாக்கத்தில் 22-11-53 ஞாயிறு மாலை 6 மணிக்கு தூகா தெலுங்கு பள்ளியில், கல்யாணம் என். எஸ். கிருஷ்ணன் குழுவினரால் ‘இந்தனர்’ கலா நிகழ்ச்சி நடைபெறும்.

‘தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்குக; தோழர்களை விடுதலை செய்க’

காங்கிரஸ் கட்சியினரும் கோரிக்கையில் கையெழுத்திட்டனர்

தூத்துக்குடி, நவ. 17— தூத்துக்குடி தி. மு. கழகத் தோழர்கள் மீதுள்ள வழக்கை வாபஸ் வாங்க வேண்டுமென்று சென்னை முதல் மந்திரி ராஜகோபாலாச்சாரியார் அவர்களுக்கு ஒரு மகஜர் அனுப்பப்பட்டது. அம் மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது :

தூத்துக்குடியில் ஜூலை 15ந் தேதி நடைபெற்ற ரயில் நிறுத்தப்போராட்டம் கண்ணியம் வாய்ந்ததாகும்; அதில் கலந்து கொண்டவர்களுக்கும், புகைவண்டி நிலைய நிகழ்ச்சிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது; அப்படியிருந்தும், தோழர்கள் கே. வி. கே. சாமி, எம். எஸ். சிவசாமி, ஆர். எஸ். தங்கப்பழம், என். நடராசன் உட்பட 32 பேர் விசாரணை இல்லாமலும் விடமறுத்தும் சிறையில் வாடுகிறார்கள். எனவே, 96 தோழர்கள் மீது தொடரப்பட்டுள்ள சதி வழக்கை வாபஸ் வாங்கவேண்டும்.”

இத்துடன் 74 கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளது. இந்த மகஜரில் 974 பேர்—குறிப்பாக காங்கிரஸ் நல்ல எண்ணம் உள்ளோர்களும் — கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். மாணவர்களும், பெண்களும் பெரும் பங்கெடுத்துக் கொண்டார்கள். (ந.-சி.)

போலீஸ் அதிகாரி மீது பொள்ளாச்சி தோழர்கள் வழக்கு

ரயில் நிறுத்தப் போரில், கோவைக்கு, பொள்ளாச்சியிலிருந்து சென்ற 5 தோழர்களைக் கைது செய்து, கோவை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அடித்து துன்புறுத்தியதாக அவர்மீது தோழர்களால் தொடரப்பட்டிருந்த வழக்கில், இம்மாதம் 26-ந் தேதி 1-வது மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜர் ஆகும்படி சம்மன் கொடுக்கப்பட்டிருக்கிறது.

‘வகுப்புவாத’ நிறைவேற்றத்துக்கு மேலும் மூன்று திங்கள் தேவையாம்!

அதற்குப் பிறகு அதிகாரத்தைவிட்டுத் தொலைவதாக ஆச்சாரியார் அறிவிப்பு!

மதுரை, நவ. 21— சென்னை மாநில முதலமைச்சர் ஆச்சாரியார், இன்னும் மூன்று மாதங்களில் தானாகவே பதவியை விட்டு விலகி விடுவாரென நம்பகமாகத் தெரியவருகிறது.

ஆச்சாரியார், சட்டசபை காங்கிரஸ் கட்சியின் கட்டுப்பாட்டிற்கு அடங்காமல், தன்னிச்சைப்படி காரியங்களைச் செய்து வருகிறார் என்றும், பதவியிலிருந்து விலகிய குறிப்பிட்ட சமூகத்திற்கு உயர்ந்த பதவிகளை கொடுத்தார் எனவும், சட்டசபை உறுப்பினர்களை, அவமதிக்கும் தன்மையில் கட்சிக்கு வெளியே உள்ள ஒருவரை அமைச்சராக நியமனம் செய்தார் என்றும் காரணம் காட்டி, அதன் காரணமாக அவர் மீது சட்டசபை காங்கிரசு உறுப்பினர்கள் சுமார் 80 பேர் கையெழுத்திட்டு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முயற்சி எடுக்கப்பட்டது.

காங்கிரஸ் குழுவின் சார்பாக, பொதுச் செயலாளர் ஸ்ரீனிவாச மல்லையா, இக்குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக இரண்டு சாராரையும் விசாரிக்கச் சென்றிருக்கிறார். அதன் பின்பு, ஆச்சாரியார் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத பல தீர்மானத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்தார்களாம்.

தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் தோழர் காமராசர், ஆச்சாரியார் இருவரும் சந்தித்து உரையாடியதாகவும் கூறப்படுகிறது.

அப்போது ஆச்சாரியார், தான் இன்னும் மூன்று மாத காலத்தில் விலகப் போவதாகவும், அதுவரை தம்மீது கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தள்ளி வைக்கும்படியும் காமராசரிடம் ஆச்சாரியார் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது.

எனவேதான், நம்பிக்கையில்லாத தீர்மானம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்றும், இதற்கென வாக்களிக்க சென்னை வந்திருந்த எம். எல். ஏ.-க்கள் ஊர் திரும்பிவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

தி. மு. கழகக் கூட்டத்தில் ஒரு போலீஸ் சிப்பாய் குறுக்கீடு

சாதாரண உடையில் தோன்றி காங்கிரஸ் களபதி போல் நடந்துகொண்டதாகப் புகார்!

17—11—53-ல், மாலை 7-மணிக்கு, கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த தண்டலை கிராமத்தில், தி. மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் எஸ். பூபால் தலைமையில் நடைபெற்றது. அதுபோது சேலம்—சிவானி எ. சுப்பிரமணியம், கழகக் கொள்கைகளையும், கட்சித் திட்டங்களையும் பற்றி விரிவுரையாற்றினார்.

பின்னர், திட்டக்குடி தோழர் ம. பொன்னம்பலம், சமுதாய ஊழல்களையும், ஆரிய ஆதிக்கத்தின் தீமைகளைப் பற்றியும், தண்டலை மணியக்காரர் தி. மு. கழகத் தோழர்களுக்குக் கொடுத்து வரும் தொல்லைகளையும் விளக்கிப் பேசிக்கொண்டிருந்தார்.

அதுபோது, கள்ளக்குறிச்சி போலீஸ்காரர் ஒருவர், சாதாரண உடையுடன் கூட்டத்திற்குள் நுழைந்து பேசிக்கொண்டிருந்த தோழர் பொன்னம்பலத்தைப் பார்த்து, “டேய் யாரடா பேசுவது? மணியக்காரரைப் பற்றிப் பேசாதே; பேசினால் கையைப் பிடித்து இழுத்துவிட்டு விடுவேன்” என மரியாதைக்குறைவாகப் பேசினார் எனவும், இதனால் கூட்டத்திலிருந்த பொது மக்கள் ஆத்திரம் தாங்காமல் போலீஸ் அதிகாரியைச் சூழ்ந்து கொண்டார்கள் எனவும், பின்பு நம் கழகத் தோழர்களின் பெரும் முயற்சியால் போலீஸ்காரரைப் பாதுகாப்போடு அனுப்பி கூட்டத்தை அமைதியுடன் நடத்தினார்கள் என்றும், தெரிய வருகிறது. (ந. சி.)

இது உண்மையா?

18—11—53 இரவு, தியாகராயநகர் ஸ்ரீ கிருஷ்ணா பிக்சர்சில் நடைபெற்ற மதுவிலக்குச் சோதனையின்போது, அங்கு மது குடிக்குமிடங்கையில் ஒரு பாரளுமன்ற உறுப்பினர் அப்பருர், மற்றொரு சென்னை பாங்கு ஏஜண்ட் அய்யரும் கலந்து கொண்டார்கள் என்பதும்; அவர்களை போலீஸ் குழுவினர் கைது செய்யாது விட்டுவிட்டார்கள் என்ற பலமான வதந்தி உலாவுவதும் உண்மையா?

கல்லக்குடி அறப்போராட்ட வழக்கு

—(:)—

வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன

திருச்சி, நவ 21—

தோழர்கள் கண்ணதாசன், ஏ. பி. தர்மலிங்கம், ஐ எம். ஷெரீப், ராதாகிருஷ்ணன், ராமசாமி உள்ளிட்ட 24 தி. மு. கழகத் தோழர்கள் மீது தொடரப்பட்டுள்ள கல்லக்குடி அறப்போராட்ட வழக்கு விசாரணை 17—11—53 ல், திருச்சி சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஏற்கனவே, 12 தோழர்கள் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இன்று, மேலும் 5 தோழர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டவுடன், மீண்டும் விசாரணை 23—11—53-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பதின்மூன்றாவதாக தோழர் சந்தானம் ஜோசப் வாக்குமூலம் கொடுத்தார்:—

"சம்பவத்தன்று நான் புனல்வாடியிலிருந்து டால்மியாபுரம் சென்றேன். கண்ணதாசன் தலைமையில் சில தொண்டர்கள் 'கல்லக்குடி' என்ற தமிழ்ப் பெயரை [illegible] சென்றனர். அப்போது நான் போலீசாரால் வெளியேற்றப்பட்டேன். நான் ஒருவரையும் அணைத்துக் கொள்ளவில்லை. ரயிலில் ஏற பிளாட்பாரத்திற்குச் சென்றபோது [illegible] இரவு சுமார் 12 மணிக்கு நான் திருச்சி [illegible] செல்லப்பட்டேன்" என்றார்.

மாஜிஸ்திரேட்டின் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில், தான் கலவரம் செய்யவில்லை என்றும், தண்டவாளத்தில் உட்காரவில்லை என்றும், தான் தி. மு. கழக அங்கத்தினர் அல்ல என்றும் கூறினார்.

பதினான்காவதாக தோழர் நாராயணன் தன் வாக்குமூலத்தில் சொன்னதாவது:—

"கண்ணதாசன் தலைமையில் சென்ற படையில் நான், ஒரு தொண்டனாகச் சென்றேன். டிக்கெட்டுடன் நான் பிளாட்பாரத்தில் இருந்தேன். போலீசார் என்னை டிக்கெட் கேட்டனர்; நான் காண்பித்தேன். ரயில் வந்ததும், போலீசார் என்னைப் பிடித்துத் தள்ளினர். எனக்கு மார்பில் அடிபட்டது. [illegible] பின் நான் கீழே விழுந்துவிட்டேன், சிறிது நேரம் கழித்து எழுந்து நின்றேன். எழுந்திருந்ததும், துப்பாக்கிக் குண்டு என் [illegible] கையில் பட்டது. [illegible] நேரம் அங்கு [illegible] ஒரு கடைக்கு அருகே சென்று போய்க் குடிக்கத் தண்ணீர் கேட்டேன். பின் லால்குடி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். அங்கு இருந்து தலைமை ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டேன்."

மாஜிஸ்திரேட் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில், தான் யாரையும் கல்லால் அடிக்கவில்லை என்றும், தண்டவாளத்தில் போலீசார் [illegible] தான் உட்காரவில்லை என்றும், தான் முன்பு தி. மு. கழகக் காரியதரிசி என்றும் கூறினார்.

பதினைந்தாவதாக, தோழர் ராஜூ என்கிற சேபாஸ்டியன் தனது வாக்குமூலத்தில் கூறியதாவது:—

"நான் பூவாளூரிலிருந்து டால்மியாபுரம் சென்றேன். ஸ்டேஷனுக்கு அருகில் [illegible] ரயில் வந்ததும், பிளாட்பாரத்தில் கூட்டம் கூடியது. அதைப் பார்க்க நான் சென்றேன். போலீசார் அப்போது தடியால் அடித்தனர். நான் அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது குண்டு சப்தம் கேட்டது. துப்பாக்கிக் குண்டு ஒன்று என் அடிவயிற்றில் (மூத்திரப் பை) உடைத்துக் கொண்டு சென்றது. உடனே என் கைகளால் நான் அதைப் பொத்திக்கொண்டேன். இரத்தம் பீறிட்டு வந்தது. இரத்தத்தைப் பார்த்ததும் எனக்கு மயக்கம் வந்து கீழே சாய்ந்தேன். பின் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. ஒரு வாரத்திற்குப் பின் திருச்சி தலைமை ஆஸ்பத்திரியில் இருந்தேன். [illegible] ஆஸ்பத்திரியில் இருந்தேன். இன்றுதான் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே அனுப்பப்பட்டேன்."

மாஜிஸ்திரேட் கேட்ட கேள்விக்கு பதிலளித்தவர்:— "நான் கல்லால் ஒருவரையும் அடிக்கவில்லை; நான் தி. மு. கழக அங்கத்தினன்; ஆனால் தொண்டன் அல்ல."

பதினாறாவதாக, தோழர் ஐ எம் ஷெரீப் தனது வாக்குமூலத்தில் பின்வருமாறு கூறினார்:—

"நான் சம்பவ தினத்தில் டால்மியாபுரத்தில் இல்லவே இல்லை. அன்று இரவு ராதாகிருஷ்ணன் திருச்சி ஜங்ஷனில் இருப்பதாகக் கேள்விப்பட்டு, இரவில் ரயிலில் ஜங்ஷனுக்குச் சென்றேன். திருச்சி ஜங்ஷனில் தகவல் கேட்டும் [illegible] விசாரித்துக் கொண்டிருந்தபோது, ஒரு சப் இன்ஸ்பெக்டர் வந்து என்னை 5 நிமிட நேரம் அங்கே இருக்கும்படி கூறினார். சிறிது நேரத்தில் என்னைப் போலீஸ் லாரியில் ஏற்றிச் சென்றனர். சிறிது தூரத்தில் ஒரு இடத்தில் நானும் ராதாகிருஷ்ணனும் [illegible] என்னையும் மற்றும் 5 பேரையும் அங்கே 5 நிமிட நேரம் இருக்கும்படி கூறினார்கள். ஆனால் அன்று காலை 4 மணிவரை அங்கேயே இருக்கும்படியாகிவிட்டது. ஒருவரும் வரவில்லை. அடுத்த தினம் போலீசார் என்னைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். [illegible] டால்மியாபுரம் [illegible]

போக சம்பவத்தை விசாரிக்க சர்க்காரால் அமைக்கப்பட்ட கமிட்டி முன் நான் இன்னது செய்து சாட்சியம் கூறினேன்."

மாஜிஸ்திரேட் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், "சம்பவத்தன்று, நான் டால்மியாபுரத்திலேயே இல்லை என்ற போது எவ்வாறு ரயில் தண்டவாளத்தில் உட்கார முடியும்? அது பொருத்தமில்லை; ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் நின்றுகொண்டு ஒருவரையும் இழிவாகப் பேசவில்லை; நான் [illegible] கத்தினேன்; ஆனால், டால்மியாபுரம் போராட்டத்தில் நான் கலந்துகொள்ளவில்லை" என்றார்.

பதினேழாவதாக தோழர் ராதாகிருஷ்ணன் தனது வாக்குமூலம் கொடுத்தார்:

"நான் அன்று திருச்சியில் [illegible] டால்மியாபுரத்திற்கு [illegible] சென்றிருந்தேன். பிற்பகல் 1 மணிவரை நடந்ததைப் பார்த்தேன். [illegible] திருச்சிக்குத் திரும்ப முடிவு செய்தேன். [illegible] [illegible] ரயில் வந்தது. [illegible] கண்ணதாசனும் மற்றவர்களும் போலீசார் [illegible] பார்த்தேன். [illegible] 200 [illegible] சென்று [illegible] தடியடி [illegible] சப்தம் கேட்டது. [illegible] [illegible] 'ரயில் [illegible] இருக்கின்றனர்,' என்று ஒருவர் [illegible] கொண்டனர். [illegible] போலீசாரும் [illegible] ஜங்ஷனுக்கு [illegible] ரயிலிலிருந்து [illegible] சென்றேன். [illegible] பத்திரத்தில் [illegible] எழுதினேன். 45 நிமிஷ நேரம் [illegible] திருச்சி [illegible] ரயிலிலிருந்து இறங்கிய 5 பிரயாணிகளை [illegible] விசாரித்துக் கொண்டிருந்தார். [illegible] சம்பவத்தைப் பற்றி விசாரித்தார். அந்த ரயிலில் பிரயாணம் செய்த ஒரு பிரயாணி [illegible] [illegible] [illegible] அதிகாரிகள் வந்தனர். அவர்கள் [illegible] இருக்கும்படியும், [illegible] புறப்பட்டுச் சென்றேன் என்றும் கூறினார். அதுவரை இருவரும் [illegible] நாங்கள் திருச்சி ஜங்ஷனிலேயே இருந்தோம். அடுத்த தினம் காலை 4 மணிக்கு ஒரு சப் இன்ஸ்பெக்டர் எங்களைக் கைது செய்ததாகக் கூறி சிறைக்கு அனுப்பினார்."

மாஜிஸ்திரேட் கேள்விக்குப் பதிலளிக்கையில், "நான் ஒருவரையும் கல்லால் அடிக்கவில்லை; [illegible] ஒருவரையும் திட்டவில்லை; [illegible] பிரசங்கம் [illegible] குறிப்பிட்டது போல் 'ஒழுங்காக வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்; இப்படிப்பட்ட பேச்சுக்களை [illegible]' என்று நான் கூறவில்லை; ரயில் தண்டவாளத்தில் நான் இருந்ததாகவும் உட்காரவில்லை; ஒருவரையும் கல்வீசுமாறு தூண்டவில்லை; என்னை அடையாளம் காட்டிய ஒருவர், முதலில் சரியாகக் காட்டவில்லை; இரண்டாவது தடவைதான் சரியாகக் காட்டினார்; நான் இச்சமயம் [illegible] மாநில [illegible] ஆக வேலை பார்க்கிறேன்; கட்சி சம்பந்தமில்லாமல் எல்லோருக்கும், யார் பணம் கொடுக்கிறார்களோ அவர்களுடைய வேலைகளைச் செய்து தருகிறேன்," என்றார்.

வழக்கு விசாரணை மீண்டும் 23—11—53-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அன்று, மற்றமுள்ள தோழர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு, மறுநாள் விவாதம் நடைபெறுமெனத் தெரிகிறது.

பம்பாயில் குடியேறியுள்ள மற்ற மாநிலத்தவர்

1931-ல் இருந்ததைக் காட்டிலும் 1951-ல் 4 மடங்கு சென்னை மக்களாம்!

பம்பாய், நவ. 19—

பம்பாய் மாநில சென்சஸ் அதிகாரி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றின்படி, கடந்த பத்தாண்டுகளில், பம்பாயைப் போன்று வேறு எந்த 'ஏ' பிரிவு மாநிலத்திலும் மக்கள் தொகை அதிகமாக இல்லை.

1941—51-ம் ஆண்டுகளில் அந்த மாநிலத்தின் மக்கள் தொகை 23·2 சதவிகிதம் அதிகரித்தது. 1941-ல், 1,8,96,166 ஆக இருந்த மக்கள்தொகை 1951-ல் 28 39 270 ஆக, பம்பாயில் உயர்ந்தது.

பம்பாயில் மக்கள் தொகையை அதிகப்படுத்திய மாநிலங்கள் சௌராஷ்டிரம், ஐதராபாத், உத்தரப் பிரதேசம், சென்னை, ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகியவையாகும்.

பம்பாய் மாநிலத்தில் 1931-ல் இருந்ததைக் காட்டிலும் நான்கு மடங்கு தமிழர் இப்போது வசிக்கின்றனர்.

* *

நாடார் மஹாஜன சங்கம்

23-வது மகாநாடு

27—12—53 ஞாயிற்றுக்கிழமை, சென்னை பச்சையப்பன் விளையாட்டு மைதானத்தில் (சைனு பஜார்) நடைபெறும்

தலைவர்: நாகர்கோவில், டாக்டர் ஜான்ஹில்கையா, M B C M.
திறப்பாளர்: கோடைக்கானல், திரு S G ஜெயராஜ் நாடார்

★

மாதர் மகாநாடு

தலைவி: மதுரை, திருமதி இராஜம்மாள் வாளசுப்ரமணியம்
திறப்பாளர்: சென்னை, திருமதி சுசீலா சந்தோஷம் B Sc.
பட்டிவீரன்பட்டி, திரு. ஊ. பு. அ. சௌந்தரபாண்டியனார் அவர்கள் திருஉருவப் படத்தை திரு. வே வ. இராமசாமி திறந்துவைப்பார்
நாடார் பெருமக்களை திரளாக வர அன்புடன் அழைக்கிறோம்

கட்டணம்: ரூ. 1000, 500, 250, 100, 50, 25, 10, 5

சென்னை: 19-11-53. வரவேற்பு சபையினர்

* *

நாகர்களின் தன்னுரிமைக் கோரிக்கை

நாகர்களின் தேசிய சங்கத்தின் சார்பில், ஒரு தூதுக்குழு தலைமை முழுவதும் தங்களது விடுதலைக் கோரிக்கையைப் பரப்பச் சுற்றுப் பயணம் செய்யும்.

அக்குழு அங்கத்தினர்கள், அன்னாரியல் என்பவர் முக்கிய காரியங்களிலும் பொதுக் கூட்டங்களிலும் பேசுவதோடு, பலவேறு கட்சித் தலைவர்களையும் சந்திப்பார்கள்.

அக்குழுவில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையும், அவர்களது சுற்றுப்பயண விபரமும் இன்னும் தெரியவில்லை.

உலகம் சுற்றும் தமிழன்

சைக்கிளில் உலகச் சுற்றுப் பயணம் துவக்கிய எம். காசிம் என்ற தென்னிந்தியர் இப்போது சிங்கப்பூர் வந்திருக்கிறார்.

24 வயதான இவர், இந்தோனேஷியா, மலேயா இவைகளைப் பார்த்துவிட்டு, சயாம், பர்மா வழியாக தாயகம் திரும்புவார்.

சிறை மீண்ட தோழர்கட்கு வரவேற்பு

சென்னை, நவ. 21—

சென்னை, இராயபேட்டை தி மு. கழக 51-வது வட்டத்தின் சார்பில், 21—9—53-ல், தலையை மீறி கண்டனக் கூட்டம் நடத்தி, 19 நாள் தண்டனை அடைந்த தோழர்கள் த. வேலாயுதம், ம. இராமலிங்கம், பொ. சண்முகம், செ. குருமூர்த்தி, வ. கண்ணன், மு. நாகராஜன், உ. செல்வம் ஆகிய 8 தோழர்களும், 10—11—53 புதன் காலை 11-மணிக்கு விடுதலை அடைந்தனர். என். சுந்தரம், பொ. ஏழுமலை, அரசு, எம். எஸ். ஏ. காதர், த. தமிழ்ச்செல்வம், மற்றும் ஏராளமான கழகத் தோழர்கள், சிறை மீண்ட தோழர்களை சிறை வாயிலில் வரவேற்றனர்.

பிரஜா-சோ. கட்சி தமிழ் மாநில முதல் மாநாடு

பிரஜா-சோஷலிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில முதல் மாநாடு நவம்பர் 28, 29-ந் தேதிகளில், சேலம் பீமா காம்பவுண்டில் நடைபெறும்.

தோழர் என் ஆர். சுப்ரமணியம் கட்சிக் கொடியை ஏற்றி வைப்பார்.

மக்கள் சபை உறுப்பினர் தோழர் ஆச்சார்ய கிருபளானி மாநாட்டிற்குத் தலைமை தாங்குவார்.

பம்பாய் பேராசிரியர் எம். ஆர். தண்டவாதே மாநாட்டைத் திறந்து வைப்பார்.

மாநாட்டை யொட்டி ஒரு கலைக் கண்காட்சியும், கவியரங்கும், பாட்டுக் கச்சேரி இன்னும் இதர கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

பத்திரிகைக் கண்காட்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

மணமேடு விவசாயக் கழகம்

15—11—53ல், ஆரம்பமான மேற்படி விவசாயக் கழகச்செயற்குழுவிற்கு தோழர்கள் [illegible] தலைவராகவும், மு. இரா. பிச்சை துணைத் தலைவராகவும், எம். பி. தங்கவேலு செயலாளராகவும், எம். பி. தங்கராசு துணைச் செயலாளராகவும், வி. கலைச்செல்வன் பொருளாளராகவும், எஸ். கே. மூர்த்தி விளம்பர உறுப்பினராகவும், மற்றும் ஒன்பது பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(ஒ.வி.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இ. என். அண்ணாதுரை, எம். ஏ.